

வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி. எம். கதிர்ஆனந்த் சிறப்புரை ஆற்றினார். உடன் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவு நாள்:

# வேலூர் வடக்கு மாவட்டம் முழுவதும் திருவுருவப் படத்திற்கு அஞ்சலி!

## மாவட்டக் கழக கூட்டத்தில் தீர்மானம்!

வேலூர், ஆக. 3 -

வேலூர் வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் 01.08.2026 ஆக்ஸிலியம் கல்லூரி அருகில் எஸ்.ஏ.மகாலில் வேலூர் மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டப் பொறுப்பாளர், டி.எம். கதிர் ஆனந்த் எம்.பி. கீழ்க்கண்ட தீர்மானங்கள் குறித்து வரவேற்று பேசினார்.

மேலும், இச்செயற்குழுக் கூட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்கழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

கர்நாடகாவின் மேகதாது அணைத் திட்டத்திற்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்படுகிறது.

★ 2018 காவிரி நடுவர் மன்ற தீர்ப்பை முழுமையாக அமல்படுத்த மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்.

தமிழக அரசு அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டி, தமிழகத்தின் நீர்வள உரிமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்படுகிறது.

தமிழ்நாட்டில் நீட் தேர்வை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

★ நீட் காரணமாக அரசு பள்ளி மற்றும் கிராமப்புற மாணவர்கள் பாதிக்கப்படுவதால், நீட் விலக்கு வழங்க மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இச்செயற்குழு வலியுறுத்துகிறது.

கழகத் தலைவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர் கிளை கழகங்கள் தோறும் அவரது திருவுருவ படத்திற்கு மலர்மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்துவதென இச்செயற்குழுவில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

வேலூர் வடக்கு மாவட்டம் புதியதாக உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு சார்பு அணிகளுக்கான சிறப்பாக பணியாற்றக் கூடிய நிர்வாகிகளை மாவட்ட, ஒன்றிய, பகுதி, வட்ட, பேரூர் கழக செயலாளர்கள் விரைவாக தேர்வு செய்து, ஒரு வாரத்திற்குள் மாவட்டக் கழகத்திடம் பட்டியலை ஒப்படைக்குமாறு இச்செயற்குழு அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தமிழ்நாட்டில்

# அத்தியாவசிய மருந்துகள் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் – காஞ்சிபுரம் க.செல்வம் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 3 -

தமிழ்நாட்டில் அத்தியாவசிய மருந்துகள் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கைகள் அரசு எடுக்குமா என்று மக்களவையில் காஞ்சிபுரம் மக்களவை உறுப்பினர் க.செல்வம் கேள்வி எழுப்பினார்.

இக் கேள்விக்கு பதிலளித்த ஒன்றிய அரசு, தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் ஜன ஔஷதி மையங்களில் அத்தியாவசிய மருந்துகள் தட்டுப்பாடின்றி கிடைப்பதை உறுதி செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது.

தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் இலவச மருந்து சேவைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், மருந்துகளின் கொள்முதல், தரப் பரிசோதனை, இருப்பு மற்றும் விநியோகம் ஆகியவை தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன.

ஜனஔஷதி மையங்களில் அத்தியாவசிய மருந்துகள் தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்ய இருப்பு கண்காணிப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளதுடன், சேவை குறைவாக உள்ள பகுதிகளிலும் புதிய மையங்கள் தொடங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

2027ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நாடு முழுவதும் 25,000 ஜனஔஷதி மையங்கள் தொடங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

# த.வெ.க. ஆட்சியில் காற்றாலை அமைப்பதில் முறைகேடு!

## தனியார் காற்றாலை மின்கம்பங்களால் சர்ச்சை!

தேனி, ஆக.3-

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள ஜீ.உசிலம்பட்டி ஊராட்சியில் தனியார் காற்றாலை அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதற்காக த.வெ.க. ஆட்சியில் மாநில நெடுஞ்சாலை மற்றும் நீர்நிலைகளை ஒட்டி அமைக்கப்பட்டு வரும் மின்சார கம்பங்களால் பல்வேறு பாதிப்புகள் ஏற்படும் என சமூக ஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் குற்றச்சாட்டு

ஜீ.உசிலம்பட்டி பகுதியில் செல்லக்கூடிய மாநில நெடுஞ்சாலையின் மிக அருகிலேயே தனியார் காற்றாலைக்கான உயர் அழுத்த மின்சார கம்பங்கள் நடும் பணி நடைபெற்று வருகிறது. எதிர்காலத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், சாலை மேம்பாட்டிற்காகவும் இந்த நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் போது, தற்போது நடப்படும் இந்த மின்கம்பங்களை அகற்றி வேறு இடத்திற்கு மாற்ற வேண்டிய சூழல் உருவாகும். இதனால் அரசுக்கு பல லட்ச ரூபாய் வீண் விரயம் ஆகும் எனச் சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

**கம்மாய் நீர்வரத்து பாதையில் அடைப்பு**

அதேபோல், அப் பகுதியில் உள்ள கம்மாய்க்கு மழைக்காலத்தில் தண்ணீர் செல்லக்கூடிய முக்கிய நீர்வரத்துப் பாதையிலும் இந்தத் தனியார் காற்றாலை மின் கம்பங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் மழைக்காலங்களில் தண்ணீர் தடையின்றி கம்மாய்க்குச் செல்வதில் பெரும் சிரமம் ஏற்படும் என்றும், வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு சுற்றியுள்ள விளைநிலங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

**பொதுமக்களின் கோரிக்கை**

“பொதுமக்களின் நலன் மற்றும் அரசு நிதியைக் கருத்தில் கொள்ளாமல், தனியார் நிறுவனத்திற்குச் சாதகமாக நெடுஞ்சாலை மற்றும் நீர்வரத்துப் பாதையில் மின்கம்பங்கள் அமைக்க அனுமதி அளித்தது யார்? சம்பந்தப்பட்ட மாவட்ட நிர்வாகமும், மின்சார வாரியமும் உடனடியாக இதில் தலையிட்டு, நீர்வரத்துப் பாதையிலும் சாலை ஓரத்திலும் அமைக்கப்படும் மின்கம்பங்களை மாற்று இடத்திற்கு மாற்ற தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்” எனச் சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் வலியுறுத்தியுள்ளனர்.

# காரைக்குடி மாநகராட்சியில் பெண் கவுன்சிலர்கள் ஆர்ப்பாட்டம்!

சிவகங்கை, ஆக. 3 -

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகராட்சி ஆகும். இந்த மாநகராட்சியில் 34 வார்டுகள் உள்ளது .

இதில் தி.மு.க. அ.தி.மு.க. காங்கிரஸ் மற்றும் சுயேட்சை மாமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். நேற்று முன் தினம் திடீரென்று மாநகராட்சி வாயிலில் முன்பாக தி.மு.க. , அ.தி.மு.க., காங்கிரஸ் மற்றும் சுயேட்சை மாநகராட்சி பெண் கவுன்சிலர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

ஆர்ப்பாட்டத்தில் த.வெ.க. பதவி ஏற்ற நாளில் இருந்து கடந்த மூன்று மாதங்களாக சாலை பராமரிப்பு, மின்விளக்கு ,தூய்மை பணிக்கான நிதியினை வழங்கவில்லை .

இதனால் வார்டுகளில் துப்புரவு மற்றும் சீர மைப்புப் பணிகள் நடைபெறவில்லை. பொதுமக்கள் கவுன்சிலர்களிடம் புகார் கூறுகின்றனர்.

இது குறித்து மாநகராட்சி ஆணையரிடம் கேட்டால் அவர் சரியான பதில் கூறுவதில்லை.

எனவே வார்டுகளில் அடிப்படை வசதிகளை உடனடியாக துவங்க கோரியும் இதற்கான நிதியினை அரசு வழங்க வலியுறுத்தி கோரி நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

இந்த ஆர்ப்பாட்டத்தினை தொடர்ந்து மாநகராட்சி ஆணையர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண் கவுன்சிலர்களிடம் இது குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறியதன் பேரில் ஆர்ப்பாட்டத்தினை முடித்துக் கொண்டார்கள். திடீரென்று பெண் கவுன்சிலர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

### தகவல் தொழில்நுட்பத் துறையில், செயற்கை நுண்ணறிவின் தாக்கத்தால்,

# வேலைவாய்ப்பின்மை அதிகரிக்கும் சூழலை கட்டுப்படுத்த, நடவடிக்கைகள் உள்ளனவா?

## மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 3 -

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் 30.07.2026 அன்று மாநிலங்களவையில் தகவல் தொழில்நுட்பத் துறையில் செயற்கை நுண்ணறி வின் தாக்கத்தால் வேலை வாய்ப்பின்மை பெருக்கும் அபாயத்தை கட்டுப்படுத்த, ஒன்றிய அரசிடம் ஏதேனும் நடவடிக்கைகள் உள்ளனவா? என்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தால் வேலை வாய்ப்புகள் பெருகிட வாய்ப்பு உள்ளதா? என்றும் ஒன்றிய அரசின் வேலை வாய்ப்புத்; துறை இணையமைச்சர் திருமதி ஷோபா கரந்தலே அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் வேலை வாய்ப்புத்; துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

ஜனவரி 2025ல் வெளியிடப்பட்ட பணியாளர்கள் ஆய்வறிக்கையின்படி 15 வயதிற்கும் மேற்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை, மொத்த மக்கள் தொகையில் 57 சதவீதமாக உயர்ந்துள்ளது என்றும், வேலை வாய்ப்பின்மை 3 சதவீதமாக குறைந்துள்ளது என்றும், 27 முக்கிய தொழிற்சாலைகளில், 64 கோடி பணியாளர்கள் வேலை செய்து வருவதாகவும், செயற்கை நுண்ணறிவை முறையாக பயன்படுத்தினால் இளைஞர்களிடையே வேலை வாய்ப்புகளை பெருக்க சாத்தியக் கூறுகள் உள்ளன என்றும்,

30,000 கோடி அமெரிக்க டாலர்கள் அளவிற்கு தகவல் தொழில்நுட்பத் துறை வளர்ச்சி அடைந்துள்ளது என்றும், அறிவு சார்ந்த கட்டமைப்புகளை பெருக்குவது இந்தியப் பொருளாதாரத்தை உலக அரங்கில் மேம்படச் செய்வதற்கு அவசியம் என்றும் இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

எதிர்காலத் திறன் மேம்பாட்டு திட்டத்தின் மூலம், 34 இலட்சம் இளைஞர்களுக்கு, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தகவல் தொழில்நுட்ப திறனை மேம்படுத்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்றும்,

தேசிய மின்ணணுவியல் நிறுவனத்தின் உதவியுடன், சைபர் பாதுகாப்பு போன்ற 43 இலட்சத்திற்கும் அதிகமானோர் பயிற்சி பெற்றுள்ளார்கள் என்றும், ஒன்றிய அரசின் வேலை வாய்ப்புத்; துறை இணையமைச்சர் திருமதி ஷோபா கரந்தலே அவர்கள் மாநிலங்களவையில் திமுக மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

### தமிழ்நாட்டில் கடலோர பயணிகள்

# படகுப் போக்குவரத்து குறித்து ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளதா?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!



புதுடெல்லி, ஆக. 3 -

தமிழ்நாட்டில் கடலோர பயணிகள் படகுப் போக்குவரத்து குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா? ஆம் எனில் விவரம் என்ன? என்று மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் கடலோர பயணிகள் போக்குவரத்து, படகு சேவைகள் மற்றும் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து மத்திய அரசு ஏதேனும் ஆய்வு மேற்கொண்டுள்ளதா?

அவ்வாறு ஆய்வு மேற்கொண்டிருந்தால், அதன் விவரங்கள், இடங்களை அடையாளம் காண மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் மாநிலத்தில் கடலோர மற்றும் உள்நாட்டு நீர்வழி இணைப்பை மேம்படுத்த வழங்கப்பட்ட பரிந்துரைகள் என்ன?

மாநிலத்தில் புதிய கடலோர பயணிகள் படகு வழித்தடங்கள், நவீன படகு முனையங்கள் மற்றும் பல்வகை போக்குவரத்து (Multimodal) உள்கட்டமைப்புகளை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளதா? அவ்வாறு இருந்தால், மாவட்ட வாரியான விவரங்கள் என்ன?

இத்திட்டங்கள் மூலம் தமிழ்நாட்டில் பாதுகாப்பான, மலிவு விலை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த நீர் வழிப் போக்குவரத்து, சுற்றுலா மற்றும் வேலை வாய்ப்புகளை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? அவ்வாறு இருந்தால் அதன் விவரங்கள் என்ன? என மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

இதற்கு துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சர் சர்பானந்த சோனோவால் அளித்த பதில் வருமாறு:

இந்திய அரசால் இது போன்ற எந்த ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர் வழிகள் அமைச்சகத்தின் சாகர்மாலா (Sagarmala) திட்டத்தின் கீழ், தமிழ் நாட்டில் ரூ. 42 கோடி மதிப்பில் பின்வரும் 4 திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன:

நாகப்பட்டினம் துறைமுகத்தின் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், நாகப்பட்டினம் (இந்தியா) - காங்கேசன்துறை (இலங்கை) பயணிகள் படகு சேவைக்காக.

அக்னி தீர்த்தம் பகுதியில் சுற்றுலாப் படகுகள் நிறுத்தும் (Berthing) வசதிகளை உருவாக்குதல்.

மண்டபம் - பாம்பன் அணுகுமுகப் பகுதியில் சுற்றுலாப் படகுகளுக்கான கூடுதல் நிறுத்தும் வசதிகளை அமைத்தல்.

கன்னியாகுமரியில் பயணிகள் ஜெட்டி (Passenger Jetty) அமைத்தல்.

தமிழ்நாட்டில் உள்ள 5 தேசிய நீர்வழிகளில் சரக்கு போக்குவரத்து மற்றும் நதி சார் சுற்றுலா மேம்பாட்டிற்காகத் திட்ட மிடப்பட்டுள்ளன என அமைச்சர் பதிலளித்தார்.

### கோவையை வறட்சி மாவட்டமாக அறிவிக்க

# மாவட்ட ஆட்சியரிடம் விவசாயிகள் வலியுறுத்தல்!

## குறைதீர் கூட்டத்தை புறக்கணித்து போராட்டம்!

கோவை, ஆக.3-

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சுரேந்திரன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அழகிரி, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் தமிழ்ச்செல்வி, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் சித்தார்த்தன், தென்னை வளர்ச்சி வாரிய இயக்குநர் அறிவாழி உள்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தோட்டக்கலை துறையில் ஆடி பட்டத்திற்கான விதை தொகுப்பு வழங்கும் திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் துவங்கி வைத்தார். பின்னர், விவசாயிகள் அனைவரும் அரசால் அறிவிக்கப்பட்ட முக்கிய பயிர்களுக்கு பயிர்காப்பீடு செய்ய கேட்டு கொண்டார்.

இதில் மாவட்டத்தில் தென்னை பிரதான பயிராக இருப்பதால் தென்னைக்கும் பயிர்காப்பீடு வேண்டும் என விவ சாயிகள் கோரிக்கை வைத்தனர். விவசாயிகளுக்கு மற்ற துறையில் உள்ளது போல் ஒரு டோல் ப்ரீ நம்பர் வேண்டும் என வலியுறுத்தினர்.

தமிழ்நாடு விவசாய சங்கத்தினர் கோவை மாவட்டத்தில் நீண்ட நாள் பயிர்களான தென்னை, வாழை மஞ்சள் போன்றவைகளும், குறுகிய கால பயிர்களான தக்காளி, பீர்க்கன், புடலை, அவரை, சின்ன வெங்காயம், சுரைக்காய், முட்டைக்கோஸ், காலிப்ளவர், வெண்டைக்காய், மிளகாய், பீட்ரூட் போன்ற காய்கறி வகைகளை விவசாயிகள் பயிர் செய்து வருகிறார்கள். இந்த சூழ்நிலையில் பருவ நிலை மாற்றத்தின் காரணமாக ஜுன், ஜுலை மாதங்களில் தென்மேற்கு பருவ மழையை முழுமையாக நம்பித்தான் விவசாயிகள் விளை பயிர்களை பயிர் செய்துள்ளோம். ஆனால், இந்த ஆண்டு கடந்த இரண்டு மாதங்களாக எதிர்பார்த்த தென்மேற்கு பருவமழை இல்லை. இதனால் மாவட்டத்தில் உள்ள அனைத்து வாய்க்கால், குளம், குட்டை, நொய்யல் ஆறு போன்றவைகளில் நீர்வரத்து இல்லாமல் நிலத்தடி நீர்மட்டம் 1,000 அடிக்கும் கீழ் சென்று விட்டது. தண்ணீர் பற்றாக்குறையினால் உற்பத்தி பாதிக்கப்பட்டு பெரும் பின்னடைவை விவசாயிகள் சந்திக்க கூடிய சூழ்நிலை உருவாகி வருகிறது.

எனவே, மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து நிலவி வரும் வறட்சியை கருத்தில் கொண்டு, தென்மேற்கு பருவமழை பெய்யாத காரணத்தினால், கோவை மாவட்டத்தை வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தினர். மேலும், விவசாயிகள் கடந்த ஜுலையில் திருமலையாம்பாளையம் பகுதியில் உள்ள தனியார் குடோனில் சட்டவிரோதமாக பதுக்கி வைக்கப்பட்டு, பிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட டன் கணக்கிலான யூரியா கடத்தலில் இதுவரை சரியான நடவடிக்கை இல்லை. இதில் தொடர்புடைய யார் மீதும் நடவடிக்கை இது வரை எடுக்காமல் மாவட்ட நிர்வாகம் இருந்து வருகிறது என தெரிவித்து மாவட்ட ஆட்சித் தலைவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மேலும், யூரியா கடத்தலில் இது வரை யாரையும் கைது செய்யாமல் மாவட்ட நிர்வாக அதிகாரிகள் அவர்களுக்கு ஆதரவாக செயல் படுவதாக விவசாயிகள் குற்றம் சாட்டினர்.

### தனது முன்னாள் உதவியாளர்

# ஆதிசேசன் தாயார் சொர்ணம்மாள் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.3-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக நான் பணியாற்றியபோது, எனது உதவியாளராகப் பணியாற்றிய ஆதிசேசன் அவர்களது தாயார் திருமதி. சொர்ணம்மாள் அவர்கள் மறைந்த செய்தியறிந்து பெரிதும் வருத்தமுற்றேன்.

பெற்ற அன்னையை இழந்து வாடும் ஆதிசேசன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### மாவட்ட கூடுதல் நீதிமன்றத்தை மாற்ற எதிர்ப்பு!

# சிவகங்கை நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம்!

சிவகங்கை, ஆக. 3 –

மாவட்ட தலைநகர் சிவகங்கையில் மாவட்ட கூடுதல் நீதிமன்றம் பல ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது தற்பொழுது காரைக்குடியில் சட்டக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. எனவே அங்கு படிக்கும் வழக்கறிஞர்களுக்கு உதவியாக காரைக்குடிக்கு மாவட்ட கூடுதல் நீதிமன்றத்தை மாற்றுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகிறது. தலைநகர் சிவகங்கையில் இருந்து மாவட்ட கூடுதல் செசன்ஸ் நீதிமன்றம் மாற்ற எதிர்ப்பு தெரிவித்து சிவகங்கை மாவட்ட நீதிமன்ற வளாகம் முன்பாக வழக்கறிஞர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தினை நடத்தினார்கள்.

வழக்கறிஞர் சங்க தலைவர் ஜானகிராமன் தலைமையில் செயலாளர் சித்திரைசாமி முன்னிலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான வழக்கறிஞர்கள் கலந்து கொண்டார்கள். சிவகங்கையில் செயல்பட்டுவரும் இந்த நீதிமன்றம் மாற்றப்படுவதால் சிவகங்கை, காளையார்கோவில், மானாமதுரை, இளையான்குடி, திருப்புவனம், திருப்பத்தூர், மதகு பட்டி, சிங்கம்புணரி கல்லல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வழக்கு நடத்துபவர்கள் மிகவும் பாதிக்கப்படுபவர்கள். இந்த நீதிமன்றம் மாற்றப்பட்டால் இவர்கள் அனைவரும் வெகு தொலைவில் உள்ள காரைக்குடிக்கு செல்ல வேண்டும். இதனால் அலைச்சலும் பணமும் அதிகம் செலவாகும்.

எனவே காரைக்குடி சட்டக்கல்லூரிக்கு தனியாக ஒரு நீதிமன்றம் அமைக்குமாறு அரசிற்கு கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டத்தினை முன்னிட்டு சிவகங்கை நீதிமன்றத்தில் நடை பெற்ற வழக்குகள் அனைத்தும் ஒத்தி வைக்கப்பட்டது.